# வவுனியாவில் குடிமனைகள் மீது குண்டுவீச்சு; தாய், மகள், மருமகன் பலி; பலர் படுகாயம்

(வவுனியா)
வவுனியா மாவட்டத்தில் சிறிலங்கா விமானப் படையின ரின் குண்டுவீச்சு விமானங்கள் பொதுமக்களின் குடிமனை கள்மீது குண்டுவீசித் தாக்கு தல் நடாத்தியதில் பாட சாலை ஆசிரியை உட்பட மூன்றுபேர் கொல்லப்பட்டுள் ளனர்; பலர் படுகாயமடைந் துள்ளனர்.
நேற்றுக் காலை 8.00மணி யளவில் தேவகுளம் பகுதி மீது நடாத்தப்பட்ட குண்டுவீச்சுத் தாக்குதலில் சிறிபத்மநாதன் (வயது 35), இவரது மனைவி யும்புதுக்குளம் மகாவித்தியா லய ஆசிரியையுமான சிறி மாலினி (வயது 30) இவரது
(4ஆம் பக்கம் பார்க்க)

Registered as a News Paper in Sri Lanka பக்கங்கள்: 04 விலை ரூபா: 4-50

ஈழநாதம்

THE EELANAATHAM PEOPLES DAILY மக்கள் தினசரி

நாதம்: 02 மார்ச் (13 - 03 - 1991) புதன்கிழமை ஓசை 23

## அம்பாறை மாவட்டத்தில் மரவள்ளிச் செய்கைக்கு தடை

(திருமலை)
அம்பாறை மாவட்டத்தில் மரவள்ளிக் கிழங்குப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுவதற்குச் சிறிலங்கா அரச படையினர் தடை விதித்துள்ளனர். படையின ரின் இந்தத் தடை நடவடிக்கையால் ஆலையடிவேம்பு பெரியகுளம், கருங்கொடித்தீவுக்குளம், நாவற்காடு, அக்கரைப்பற்று, பனங்காடு, 7 ஆம் வட்டாரம் ஆகிய பிரதேசங்களில் வருடம் தோறும் மரவள்ளிச் செய் கையில் ஈடுபடும்சமார் 500 இற் (4 ஆம் பக்கம் பார்க்க)

### சட்ட விரோதமாக கைதுசெய்யப்பட்ட

# பூஸாவில் உள்ளோர் வழக்குத்தொடர அனுமதி

(கொழும்பு)
சட்ட விரோதமாக கைது செய்யப்பட்டு பூஸா முகாமில் தடுப்புக் காவ லில் உள்ளவர்கள் வழக்குத் தொடர உயர் நீதிமன்றம் அனுமதித்துள்ளது, அடிப்படை மனித உரிமைகள் மீறல் தொடர்பாக 185 பேர் மனுச் செய்ததை அடுத்து 171 பேர் வழக்குத் தாக்கல் செய்ய அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

பூஸா முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 800 பேர் தொடர்பாக தாம் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளதாக இலவச சட்ட ஆலோசனை நிலையத்தைச் சேர்ந்த சட்டத்தரணி செல்வி. சுமனா பெணரகம தெரிவித்தார். சட்ட விரோதமாகச் கைது செய்து தம்மைச் சிறை வைத்திருப்பதாக இவர்கள் ஏற்கனவே முறைப்பாடு செய் திருந்தார்கள். தம்மை உடன டியாக விடுதலை செய்யும்படி அல்லது சட்டத் துக்கமைய தமக்கெதிராக நீதிமன்றங்க ளில் வழக்குத் தொடரும்படி இவர்கள் தமது மனுக்களில் கோரியிருந்தனர். விண்ணப்ப தாரிகள் சார்பாக சத்தியக்
(4 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே. கட்சியினர் 1,600 பேர் கொலை

(கண்டி)
சிறிலங்காவில் 1988 - '89 காலப்பகுதியில் 6,000 குடி மக்களும், 1,600 ஐக்கிய தேசி யக் கட்சியினரும் (யு. என். பி.) கொல்லப்பட்டார்கள். இத் தகவலை கலன்வேவில் மகாவலி விழாவில் பேசும் போது ஜனாதிபதி ஆர். பிரே மதாச தெரிவித்தார்.

## மேலும் ஒரு துப்பாக்கி மீட்பு

(திருக்கோணமலை)
தோப்பூர் இராணுவ முகா மைச் சேர்ந்த ராணுவத்தின ருக்கும் புலிகளுக்குமிடையே
(4ஆம் பக்கம் பார்க்க)

## 14 தமிழர் பள்ளிக்குடியிருப்பில் ஊர்காவற்படையால் கைது

(திருக்கோணமலை)
திருக்கோணமலை மாவட் டத்தில் பதின்நான்கு தமிழ்ப் பொதுமக்களை முஸ்லிம் ஊர் காவற்படையினர் கைது செய் துள்ளனர்.
கடந்த ஞாயிற்றுக்கிழமை மூதூர்ப் பகுதியில் உள்ள பள் ளிக்குடியிருப்புப் பகுதியில் புகுந்த முஸ்லிம் ஊர்காவற் படையினர் பதின்நான்கு தமிழ்ப்பொதுமக்களைக்கைது செய்து கொண்டு சென்றுள்ள னர். இவர்கள் பற்றிய விபரம் எதுவும் தெரியவரவில்லை.

## மூளைக்காய்ச்சலுக்கு சிறுவன் பலி

(யாழ்ப்பாணம்)
மூளைக்காய்ச்சல் நோயால் சிறுவனொருவன் யாழ். போதனாவைத்தியசாலைக்கு
(4ஆம் பக்கம் பார்க்க)

## கல்விப் பணிப்பாளரிடமும் விண்ணப்பம் சமர்ப்பிக்கலாம்

### ஆதர் வெதமுல்ல

(கொழும்பு)
வடக்கு - கிழக்கு மாகாணப் பகுதியில் நிலவிய கலவர நிலைமை காரணமாக க. பொ. த. (உயர்தர) பரீ ட்சை 1990க்கு விண்ணப் பிக்க முடியாதிருந்த பாட சாலை, தனிப்பட்ட பரீட்சார் த்திகள் 1991 மார்ச் 15ஆம் திகதிக்கு முன்னதாகத் தமது விண்ணப்பங்களை பிராந்தியக் கல்விப் பணிப்பாளர்களிடம் நேரில் ஒப்படைக்கலாம். அல்
(4ஆம் பக்கம் பார்க்க)

## விண்ணப்பம் என்னிடம் தரலாம் ஆனால் நான் பொறுப்பில்லை

### சுந்தரலிங்கம்

(யாழ்ப்பாணம்)
ஏப்பிரல் இருபத்திரெண் டாம் திகதி ஆரம்பமாக உள்ள உயர்தரப் பரீட்சை க்கு மாவட்ட கல்விப்பணிப் பாளருக்கு விண்ணப்பிக்க லாம் என்று வெளிவந்த செய் திகளுக்கு தாம் முழுப்பொ றுப்பும் ஏற்க முடியாது என யாழ். மாவட்ட கல்விப் பணிப்பாளர் இரா. சுந்தர லிங்கம் குறிப்பிட்டார்.
இவ்விடயம் குறித்து அவர்
(4ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டு கூட்டுறவுச் சங்கங்கள் பொருள்களுக்கு விலை நிர்ணயம்

(யாழ்ப்பாணம்)
எதிர்வரும் பதினைந்தாம் திகதியிலிருந்து யாழ். மாவட் டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் புதியஒரு நிர்ணய விலையை கடைப்பிடித்து நுகர்வோர்களுக்கு வழங்க உள்ளன. இந்த நிர்ணயிக்கப் பட்ட விலையின்படி மருதங் கேணி, தீவுப்பகுதி ஆகிய இருபிரிவுகளிலும் உள்ள பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங் களுக்கு போக்குவரத்துச் செலவு காரணமாக கொண்டு
(4ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களக் கிராமத்தில் புளொட் சிரமதானம்

(வவுனியா)
சிங்களக்கிராமமான அட்ட மஸ்கட என்னும் கிராமத்தில் புளொட் குழுவினர் சிரமதா
(4 ஆம் பக்கம் பார்க்க)

## புறாக்களின் மத்தியில் ரஞ்சன் ஒரு கழுகு

ரஞ்சனின் கொலைக்கும் புலிகளுக்கும் தொடர்பிருப்ப தாகத் தான் சந்தேகப்படுவ தாகவும், புலிகளுடன் ரஞ்சன் விஜேரட்னா ஏறக்குறைய ஒரு தனிப்பட்ட யுத்தத்தை மேற்கொண்டிருந்தார் என்ற ராணுவ அதிகாரி கூறியதை யும் மேற்கோள் காட்டி டைம்ஸ் ஓவ் இந்தியா நாளி தழ் ரஞ்சன் பற்றி எழுதியுள் ளது, சிறிலங்காவில் புறாக் கள் மத்தியில் ரஞ்சன் ஒரு கழுகு என்றும் அப்பத்திரிகை ரஞ்சனை வர்ணித்துள்ளது.

## படகில் இருந்து கலிபர் தாக்கு பருத்தித்துறையில் மூவர் காயம்

பருத்தித்துறைக்கடற் பகுதி யிலிருந்து சிறிலங்கா கடற் படையினர் குடியிருப்புக்களை நோக்கி கலிபர் தாக்குதல் நடாத்தியதில் மூன்றுபேர் காயமடைந்தனர்.
(4ஆம் பக்கம் பார்க்க)

## வியாபாரியிடம் 25,000 ரூபாவை இராணுவம் பறித்தது

(வவுனியா)
வவுனியா தாண்டிக்குளம் இராணுவ முகாமைச்சேர்ந்த சிறிலங்கா இராணுவத்தினர் சில வாரங்களுக்கு முன்னர் ஊர்காவற்றுறையைச்சேர்ந்த வியாபாரி ஒருவரிடமிருந்து 25,000 ரூபா பணத்தைப் பறித்தெடுத்ததுடன் அந்த வியாபாரியையும் கொலை செய்ய முயன்றுள்ளனர்.
(4ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் வெடிகுண்டு நிபுணர் கொழும்பில் நின்றதாக தகவல்

(கொழும்பு)
ஹெவ்லொக் வீதி குண்டு வெடிப்புச் சம்பவத்துக்கு இரண்டு நாட்கள் முன்னதாக விடுதலைப்புலிகள் வெடிகுண்டு நிபுணர் ஒருவர் கொழும்பில் நின்றதாகப் பொலிஸ் வட் டாரங்கள் தெரிவித்துள்ளன. குண்டுகள் தயாரிப்பதில் கை தேர்ந்தவரும், மட்டக்களப்பு பிரதேசத் தளபதியுமான நியூ
(4ஆம் பக்கம் பார்க்க)


## சூட்டுக் காயங்களுடன் இரு சடலங்கள் கரை ஒதுங்கின

(செம்மை)
பருத்தித்துறை-கற்கோவளம் கடற்கரையில் நேற்று அதி காலை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் இரு சடலங் கள் காணப்பட்டன.
கடந்த 9 ஆம் திகதி கடற் படையினரின் பீரங்கித்தாக்கு தலின்போது, படகிலிருந்து காணாமல்போன சபாபதி என்றழைக்கப்படும் ந. முரளி
(4ஆம் பக்கம் பார்க்க)

## வீர வணக்கம் அறிவழகன்

மணலாறு மாவட்டத்தில் கடந்த ஆறாம் திகதியன்று இடம்பெற்ற விபத்தொன்றில் சிக்கி அறிவழகன் என்னும் போராளி மரணமடைந்துள் ளார். இவருக்கு விடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத் தைத் தெரிவித்துக்கொண்டுள் ளனர்.

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**வீரவேங்கை பாப்பு**

**(பேரின்பநாயகம் குணநாயகம்)**

வீரஜெனனம்: 05-05 1972

வீரமரணம்: 13-03-1989

ஆண்டு இரண்டு சென்றாலும்
என்றும் உனை மறவாத
அப்பா, அம்மா,
சகோதரர்கள்.

குணநாயகர் வீதி,
திருநெல்வேலி கிழக்கு.

(R-1168)


வரி விளம்பரம்

### தவறி விட்டது

வேலுப்பிள்ளை வீரசக்தி ராமநாதன் 235/1 ஏத்துக்கால் நீர்கொழும்பு முகவரியுடனான சட்டிடத்தினைக்கான ஒப்பந்தக்காரர் பதிவுப் புத்தகம் சிவப்பு கவரிலானது 12-3-91 கோப்பாய்க்கும் கச்சேரிக்குமிடையில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் வீ வீ இராமநாதன் பாக்கியபவனம் கல்லூரி வீதி, பருத்தித்துறை முகவரிக்கு தொடர்பு கொள்ளவும். (R/1179)

### நியூ வெஸ்ரேன் எலக்ரோனிக்கோப்

ரி. வி. டெக், றேடியோ, மணிக்கூடு, றிவைண்டிங் மற்றும் எல்லா உபகரணங்களும் திருத்துபவர்களும், விற்பனையாளர்களும் வீடியோ ஸ்டில்படப்பிடிப்பாளர்களும். புதிய பழைய பாடல்களும் (புரட்சிப்பாடல்கள்) பதிவு செய்து கொடுக்கப்படும், ஒட்டுமடம் சந்தி, ஒட்டுமடம் யாழ்ப்பாணம். (B/2102)

### பாடசாலை பஸ்சேவை

அரேகரின் வேண்டுகோளுக்கிணங்க சிறுவருக்கான பாடசாலை பஸ்சேவை உரும்பிராயிலிருந்து ஆரம்பமாகி யாழ்நகர் பாடசாலைவரையும். தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: சதா. செல்லத்துரை வீதி. உரும்பராய் (R/1180)


## நான்காம் வருட நினைவு



**திருமதி அல்வீனப்பர் திரேசம்மா**

தோற்றம்: 27 - 02 - 1930

தேற்றம்: 13 - 03 - 1987

ஆண்டுகள் நான்கு ஓடி மறைந்தாலும்-அம்மா
அவனியில் எமது வாழ்வு மேம்பட
நீண்ட உங்கள் சிலுவைப் பாதை
நினைவுகள் நெஞ்சிருக்கும் வரை-நிலைத்திருக்கும்.

16/8 மத்திய கிழக்கு வீதி.
ரெக்கிளமேஷன்,
குருநகர். (B-2127)

உங்கள் பிரிவால் துயருறும்
அன்புக் கணவன், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



**ஜெயக்கொடி பிரதீபன்**

(ஹாட்லிக் கல்லூரி மாணவன் -ஆண்டு 8)

தாயின் மடியில் 27-10-1978

ஆண்டவன் அணைப்பில் 10-02-991

உமது ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம் !

உமது பிரிவால் வாடும்
பெற்றோர். உடன்பிறப்புக்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

R/ 1164)



## 3ஆம் வருட வீர அஞ்சலி

**வீரவேங்கை ரவி**

**(கணேசலிங்கம் இரவிச்சந்திரன்)**

[கட்டுவன், தெல்லிப்பளை:

ஜனனம்: 31-06-1968 வீரமரணம்: 31-01-1988

(தேசத் துரோகிகளும், அந்நிய இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்ட முற்றுகையின்போது தன்னைத் தானே சுட்டு வீரமரணத்தைத் தழுவியவர்.)

''மாண்ட வீரர் கனவு பலிக்கும்
மகிழ்ச்சிக் கடலில் தமிழ்மண் குளிக்கும்''
— குடும்பத்தினர், உறவினர், நண்பர்கள்;

(B.2128)

## 45-ம் நாள் வீர அஞ்சலி



முல்லை மாவட்டத் தளபதி

**மேஜர் காந்தன்**

திருக்கோணமலை

**(வீரசிங்கம் திலீப்குமார்)**

வீரஜனனம்: 06-08-1971

வீரமரணம் 27-01-1991

மண்ணை நேசித்தாய்
மக்களை நேசித்தாய்
உன்னுடைய சகாக்களை
அணைத்து நின்றாய்
பதினான்கு வயதினிலே படிப்பதனை
விட்டெறிந்தாய்
சற்று கலை போதுமென்று
களத்தினிலே குதித்து விட்டாய்
ஆறாண்டின் இறுதியிலே
உன் செயல் முடித்து வைத்தாய்
காலை மாலை பாராமல் உன் வேலை
என நடந்தாய்
உன் செயலை நாம் நினைத்து

வாடி இங்கே வெதும்புகிறோம்
ஆறு வைகாசி எனவே அன்னை
அவன் கேட்டு நிற்க
ஆறாண்டாய் போகிறதே
நான் அதை விரும்பவில்லை
அரசாங்க வேலை அது நான் அங்கு
செய்யவில்லை
எங்கள் அடிமை விலங்கை
உடைத்திடவே நான் அங்கு களம் குதித்தேன்
நீ இதனை கூறிவிட்டாய் என் கண்கள்
குளமாக உன் செயலை வாழ்த்துகிறேன்
வீர அன்னை என நின்று.

புதுக்குடியிருப்பு,
முல்லைத்தீவு.

அம்மா, அண்ணன்மார், அக்காமார்,
தம்பி, தங்கை, மருமக்கள்
உற்றார், உறவினர், நண்பர்கள்

(B/2126)

## நினைவு கூருகின்றோம்

### மார்ச் 13

1988 ஆம் ஆண்டு பேச்சுவார்த்தைக்கென இந்தியாவிலிருந்து அழைத்து வரப்பட்டு கிளிநொச்சியில் இந்திய இராணுவத்தினரால் வஞ்சமாகக் கொல்லப்பட்ட
லெப்.கேணல் ஜொனி (விக்னேஸ்வரன் விஜயகுமார் புலோலி)

இதே ஆண்டு வேணாவிலில் எமது முகாம் முற்றுகையிடப்பட்ட போது ஏற்பட்டமோதலின் பின் சயனைட் அருந்தி வீரமரணமடைந்த
லெப். இமெல்டா (அமிர்தநாதர் மரியகோரி - யாழ்ப்பாணம்)
கரபி (மஞ்சுளா - திருநகர், கிளிநொச்சி)
டொறின் (துரைசிங்கம் சாந்தினி - கொடிகாமம்)
சுகி (தஷ்யந்தி நடேசபிள்ளை - நீர்வேலி)
ஹெலன் (அனுஷிய தேவி - காரைக்கால்)
றொசானி (செல்லத்துரை சுதாங்கனி - கொடிகாமம்)

1989 ஆம் ஆண்டு கலட்டியில் இந்திய இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் காயமுற்று சயனைட் அருந்தி வீரமரணமடைந்த
பாபு (பேரின்பநாயகம் குணநாயகம் - திருநெல்வேலி)
ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்

- விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி

(B/ 21.7)

### ❋ சிந்தனைக்கு ❋

உன் சொல்லுக்கு ஒப்பச் செயலையும்,
செயலுக்கு ஒப்பச் சொல்லையும் இணங்கச் செய்.

— வில்லியம் ஷேக்ஸ்பியர்


# ஈழநாதம்

81, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம், 13-03-1991
தொலைபேசி
ஆசிரியபீடம்: 025-2839 நிர்வாகபீடம்: 2208
த.பெ.எண் 05


## தெற்கு அனுபவத்துடன் வடக்கிற்கு விஜயதுங்கா

"வடக்கு கிழக்கு மாகாணங்களில் நிலவி வரும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்குரிய காலம் வந்துவிட்டது. இப்பிரச்சினையைத் தீர்க்க வேண்டும் என்பதில் நாம் மிகவும் அக்கறையாகவுள்ளோம்" என சிறிலங்கா பிரதம மந்திரியும், நிதி மந்திரியும், புதிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருமான டி.பி. விஜயதுங்கா தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில் பாதுகாப்புச் செலவிற்கென செலவிடப்படும் 50 கோடி ரூபாவை அபிவிருத்திக்குப் பயன்படுத்தலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா புதிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான டி.பி. விஜயதுங்காவிற்கு முன்னைய பாதுகாப்பு இணை அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னாவைவிட பொருளாதார விடயங்களில் சற்று கரிசனை அதிகம் இருக்கும் என்பதில் எவருக்கும் சந்தேகமிருக்க முடியாது. வெளிநாடுகளின் கட்டுப்பாடுகளுக்கும் மிரட்டல்களுக்கும் உட்பட்டு நிதியைப் பெறும்போதே அதை அழிவிற்குப் பயன்படுத்தும்போது அவருக்குச் சிறு சங்கடங்கள் தோன்றத்தான் செய்யும்.

ஆனால், புதிய இராஜாங்க அமைச்சர் டி.பி. விஜயதுங்காவின் அபிவிருத்திக்கான 50 கோடி ரூபா இன்றைய சிறிலங்காவின் பாதுகாப்புச் செலவினங்களில் இருபத்தைந்தில் ஒரு பங்கு கூட இல்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. 1991ஆம் ஆண்டிற்கான சிறிலங்கா பாதுகாப்புச் செலவீடு 1,178 கோடி ரூபாவாகும். அதோடு வருட முடிவில் குறைந்தது 500 கோடி ரூபா அளவிலாவது கடந்த வருடத்தைப் போன்று குறை நிரப்புப் பிரேரணை கொண்டுவரப்படும் எனவும் எதிர்பார்க்கலாம். இதேவேளை சிறிலங்கா இராணுவத்தால் அழிக்கப்பட்ட தமிழரின் பல ஆயிரம் கோடி ரூபா சொத்தின் ஒரு சிறுபகுதிகூட டி.பி. விஜயதுங்காவின் அபிவிருத்தி நிதியில் இல்லை என்பதையும் அவதானிக்கலாம்.

அபிவிருத்தி பற்றி டி.பி. விஜயதுங்கா அவர்கள் பேசுவது ஒருபுறம் இருக்கட்டும் வடக்கு கிழக்குப் பிரச்சினைக்கு அவர் கொண்டுள்ள தீர்விற்கான அணுகுமுறை, அவர் கொண்டுள்ள நோக்கம் என்ன? தீர்வு தொடர்பாக அவர் வெளியிட்ட கருத்துக்கள் குழப்பமானவையாகவும், தீர்வை எட்ட முடியாதவையாகவுமே தென்படுகின்றன.

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக பதவி ஏற்றபின் பாராளுமன்றத்தில் பேசிய டி.பி. விஜயதுங்கா மோதிக்கொள்வதற்குப் பதில் பேச்சுவார்த்தை மூலம் பிரச்சினையைத் தீர்க்கவே விரும்புகிறோம் எனக் குறிப்பிட்டு தனது அதே உரையின் தொடரில், ஒரு இரு வருடங்களுக்குமுன்னர் ஜே.வி.பியினருக்கு எதிராக தென்னிலங்கையில் பாதுகாப்பு படையினர் மேற்கொண்ட பணிகளையே இன்று வடக்கு கிழக்கில் மேற்கொள்கின்றனர் என்றும் குறிப்பிட்டார்.

இதன் மூலம் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரின் நிலை என்ன என்பதை புரிந்துகொள்வது சிரமமாக உள்ளது. ஒரு இரு வருடங்களில் ஜே.வி.பியினருக்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில் 60 000க்கு மேற்பட்ட சிங்கள மக்கள் கொன்று குவிக்கப்பட்டது போன்ற இராணுவ நடவடிக்கைதான் - இன்று தமிழ்ப் பிரதேசங்களில் நடப்பது போன்று - தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு என அமைச்சர் கருதுகின்றாரா?

சிறிலங்கா இராணுவத்தினருக்கு - முன்னாள் அமைச்சர் ரஞ்சன் விஜேரட்னா காலத்தில் - தமிழர் தேசிய பிரச்சினையை இராணுவ ரீதியாகத் தீர்ப்பதற்கு எதிர்வரும் ஜூன் வரை சிறிலங்கா ஜனாதிபதியினால் கால அவகாசம் வழங்கப்பட்டதாகச் சில செய்திகள் தெரிவிக்கின்றன. அதை மனதில் வைத்துக்கொண்டு பிரச்சினைத் தீர்விற்கு காலம் வந்துவிட்டது என புதிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் கருதுகின்றாரா?

ஆனால், தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய உருப்படியான நடவடிக்கைகள்/முயற்சிகள் எதையும் சிறிலங்கா அரசாங்கம் செய்வதாகத் தெரியவில்லை. மாறாக, இராணுவ முஸ்தீபுக்களே பெருமளவில் நடைபெறுகின்றன. இந்நிலையில் புதிய அமைச்சர் எத்தீர்வைக் கருதினாலும் தமிழரின் உரிமைகள் பாதுகாக்கப்படாத எந்தவித தீர்வொன்றையும் தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள் என்பது மட்டும் உண்மை.

## "மீடியா" போர்வைக்குள்
# அமெரிக்க அசுரக் கோலம்

நமது நாகர் கோவில் கடற்கரை மணல்பரப்பில் குடிமனைகள் மீது சிறிலங்கா கடற்படை ரோந்துப் படகு ஒன்று பீரங்கித்தாக்குதலை மேற்கொண்டது. "சேதவிபரம் தெரியவில்லை" இது எமது பத்திரிகைகளில் மிக அண்மையில் பிரசுரமாகியிருந்த செய்திகளில் ஒன்று. சிலபத்திரிகைகளே பரபரப்பு கொண்ட எமது மண்ணின் கடற்கரை மணலில் திரிந்து சேதவிபரம் சேகரிக்க முடியாத நாம் வளைகுடா பாலைவனங்களில் ஈராக்கிய ஆக்கிரமிப்பை எதிர்த்து பாரிய ஆக்கிரமிப்பொன்றை செய்யக் காத்துநின்ற பன்னாட்டுப் படைகளில் எத்தனை பேர் எலிக்கடிக்குள்ளானார்கள்" என்று புள்ளிவிபரம் தருகிறோம். அமெரிக்கப்படைகளின் தொப்பிக்குள் என்ன என்ன ரகசியங்கள் இருக்கின்றன என்று செய்தி தருகிறோம்.

காடிங் வியட்னாமிய சிறுமி ஒருத்தியின் ஆடைகள் அனைத்தும் களைந்து விட்டு அவளை வீதியில் ஓடவிட்டு அதைப் பார்த்து ரசிக்கும் அமெரிக்க படைகளின் காட்சி என வியட்னாமிய கிராமங்களில் அமெரிக்கப் படைகள் செய்த பஞ்சமா பாவங்கள் அனைத்தும் பத்திரிகையாளரிடம் இருந்து தப்பவில்லை. இதனால் அமெரிக்காவின் செயல் அந்த கால கட்டத்திலேயே உலகிற்கு வெளிக்காட்டப்பட்டது. உலகம் அமெரிக்க இராணுவம் குரூரமான செயல்களில் இறங்கிவிட்டது என கண்டித்தது வியட்னாமில் அமெரிக்காவின் படுதோல்வி வெளிப்படையாகி விட்டது.

1983ஆம் ஆண்டு தனக்கு சாதகமற்ற ஆட்சி ஸ்தாபிதமாயிருந்த, தனது அயலில் உள்ள, ஒரு சின்னஞ்சிறு தீவான கிரனடாமீது 1900 அமெரிக்க பரா இராணுவத்தினர் விமானங்களில் இருந்து பரசூட் மூலம் குதித்தனர். கண்ணில் பட்டவர்களை எல்லாம் வேட்டுக்களால் கொன்றனர். கிரனடா மக்கள் ஆயிரக் கணக்கில் கொன்று குவிக்கப் பட்டனர். மிகக்குறுகிய 48 மணி நேரத்திற்குள் அமெரிக்க நலன் காக்கக் கூடிய அரசும் ஸ்தாபிக்கப் பட்டது. ஒரு லட்சத்து முப்பதாயிரம் மக்கள் தொகையைக் கொண்ட

### ❋ லோகன் ❋

கிரனடாவில் பத்துவீதம் மக்கள் கொல்லப்பட்டதாக பின்னர் அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த நடவடிக்கையின் போது வியட்னாமின் கற்றபாடம் நன்றாகக் கவனிக்கப் பட்டது. பத்திரிகையாளர்கள் எவரும் ஒரு சில மாதங்களுக்கு கிரனடாவின் உள்ளே அனுமதிக்கப்படவில்லை. அனைத்தும் இருட்டடிப்புக்குள்ளானது.

கிரனடா நடவடிக்கை முடிந்து மூன்று வருடங்கள் சரியாக முடியவில்லை. 1986 இல் பிரித்தானியாவில் உள்ள அமெரிக்கத் தளம் ஒன்றிலிருந்து முப்பது எவ் - 111 ரக குண்டு வீச்சு விமானங்கள் ஏற்கனவே திட்டமிட்டபடி அத்திலாந்திக் கடலின் மேலாக எழுந்து பறந்தன. ஜிப்ரோல்ரர் அணையைக் கடந்து மத்தியதரைக் கடல் வானில் புகும் வேளையில் தமக்குத் தேவையான எரிபொருளை அருகே வந்த எண்ணை தாங்கி விமானம் ஒன்றிலிருந்து நிரப்புகின்றன. பின்னர் தொடர்ந்து பறந்து சென்று லிபியா நாட்டின் தலைநகரங்களான திரிபோலி, பெங்காசி ஆகியவற்றின் மீது குண்டுகளை வீசுகின்றன. நிலத்திலிருந்து ஏவப்பட்ட லிபியாவின் ரஷ்யத்தயாரிப்பு சாம் - 5 ஏவுகணைகள் விமானங்களை நோக்கி சீறிப் பாய்ந்து வந்த போதிலும் லாவகமாக அவற்றிலிருந்து தப்பிய விமானங்கள் உரிய இடத்துக்கு வந்து சேர்ந்தன. 1988 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 27ஆம் திகதி ரோம், வியன்னா ஆகிய நகரங்களில் உள்ள

## யாழ்குடா நிருபரின் வளைகுடா நோக்கு

இந்தநிலைமை எமது யாழ்குடா நாட்டில் மட்டுமல்ல உலகின் பெரும்பாலான நாட்டுப் பத்திரிகைகள், தொலைக்காட்சி நிறுவனங்களுக்கும் ஏற்பட்டுத்தான் இருக்கிறது. உலகை சிரிக்க வைக்கும், மகிழ்ச்சி ஊட்டக் கூடிய, சுவாரஸ்யமான செய்திகள் ஏராளம் அந்த பாலைவன சூறாவளி இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து எமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால் இந்த சூறாவளியில் அகப்பட்டு பல்லாயிரக்கணக்கான அப்பாவி மனித உயிர்கள் கொல்லப்பட்டதை நாம் மறந்து விட்டோம். கிளுகிளுப்பூட்டும் செய்திகள் கிடைத்துக் கொண்டிருந்த அதே சமயம் தான் சகிக்க முடியாத குரூர சம்பவங்களும் நிகழ்ந்தன.

அண்மையில் தமிழ்நாட்டில் தனியார் படமாளிகைகள் ஒரு ஹர்த்தால் நடத்தின. காரணம் கேபிள் தொலைக்காட்சிக்கு மக்கள் ஆதரவு பெருமளவு ஏற்பட்டதால் தியேட்டர் காரருக்கு வருவாயில் வீழ்ச்சி ஏற்பட்டு விட்டது. தமிழ்நாட்டில் மட்டுமல்ல, தெற்காசிய பிராந்தியத்தில் மட்டுமல்ல உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள பெருந்தொகையான தொலைக்காட்சிகளில் "கேபிள் நியூஸ் நெற்வேக்" (CNN) உலக அறிக்கை தினமும் காட்டப்பட்டுவந்தது; வருகிறது இந்த அறிக்கையை மின்சாரம் இல்லாத காரணத்தினால் எமது தமிழ் மக்கள் பார்க்கக்கிடைக்கவில்லை இலங்கை ரூபவாஹினியிலும் இந்த உலக அறிக்கை ஒளிபரப்பானது.

**வியட்னாமில் கற்றபாடம்**

வியட்னாமில் அமெரிக்கா தோற்றது என்பதை ஜோர்ஜ் புஷ் உட்பட அனைவரும் இப்பொழுது கூறிவருகின்றனர். இந்த தோல்வியின் முக்கிய காரணங்களில் முதலிடத்தை உலகின் செய்தித்தகவல் துறை பெற்றுக் கொள்கிறது. வியட்னாமிய யுத்தகாலத்தில் அமெரிக்கப்பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் கூட தவிர்க்க முடியாத வகையில் அமெரிக்கப் படைகளின் நாசவேலைகளை படம் போட்டு காட்ட வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. உதாரணமாக ரைம்ஸ், நியூஸ்வீக் போன்ற சர்வதேசசஞ்சிகைகளில் நடுவீதியில் வைத்து அமெரிக்க ஆதரவாளன் ஒருவன் போராளிகளுக்கு உளவு கொடுத்தவனைச் சுட்டுக்கொல்லும்

விமான நிலையங்களில் திடீரென குண்டுகள் வெடித்ததில் 19 பேர் கொல்லப்பட்டனர். இதில் ஐவர் அமெரிக்கர்கள். இந்த குண்டு வெடிப்புகளுக்கு புகலிடம் கொடுத்து வைத்திருப்பது லிபியாவே என அன்றைய ரேகன் நிர்வாகம் காரணங்காட்டி லிபிய நகரங்களின் அழிவுக்கு நியாயம் கூறியது.

இந்த அமெரிக்க விமானங்கள் அத்துமீறி ஒரு நாட்டின் தலைநகரைக் குண்டுவீசி தகர்த்த போதும் அமெரிக்க எவ் ரக விமானங்களின் சாகசம் பெரிதாக புகழப்பட்டது. இந்த சாகச புகழ்ச்சி லிபியா மீது நடாத்தப்பட்ட சர்வதேச சட்டத்திற்கு முரணான தாக்குதலையும் திரிபோலி, பெங்காசி நகரங்களின் மக்கள் படுகொலைகளுக்கும் மேலாக தென்பட்டது. லிபிய தலைவர் கடாபியின் மாளிகையின் குசினி, குண்டு வீச்சில் உடைபட்டதும் வியந்து புகழப்பட்டது. உலகின் அனைத்து தொலைத் தொடர்பு சாதனங்களும் விமான சாகச மாயைக்குள் வீழ்ந்து விட்டன.

(தொடரும்)

## கொழும்பில் தடுத்து வைக்கப்பட்ட
# யாழ். பல்க. பொருள்கள் எடுத்துவர நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் யாழ். பல்கலைக்கழகத்துக்குரிய உபகரணங்களையும், தளபாடங்களையும் எடுத்து வருவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

1987ஆம் ஆண்டு இந்திய இராணுவத்தினால் சேதமாக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழகத்தின் தளபாடங்கள், உபகரணங்களுக்குரிய பதிலீடாக லண்டனிலிருந்து தருவிக்கப்பட்ட மேற்படி உபகரணங்கள் கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. இவற்றை எடுத்து வருவது தொடர்பாக யாழ். பல்கலைக்கழகத்தின் உயர் அதிகாரிகள் குழுஒன்று கொழும்பு சென்று நடவடிக்கை எடுத்து வருகின்றது. இப் பொருள்கள் கடந்த ஒரு வருடத்திற்கு மேலாக கொழும்பில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்த அதிகாரிகள் குழு தற்போது பல்கலைக்கழகத்தை எதிர்நோக்கும் சில நடைமுறைப் பிரச்சினைகள் மற்றும் எரிபொருள், பணம் போன்றவற்றை நேரடியாகப் பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்கள் பற்றியும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடாத்தி உரிய நடவடிக்கைகள் எடுப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. (க)

### ஆய்வுரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொருளியற் கருத்தரங்கு மண்டபத்தில் இன்று புதன்கிழமை பி.ப 3 மணியளவில் "எண்பதுகளில் ஈழத்துத் தமிழிலக்கியப் பரப்பில் நிகழ்ந்த கலை இலக்கிய விவாதங்கள்" என்னும் பொருள் பற்றி திருமதி மௌ. சித்திரலேகா ஆய்வுரை நிகழ்த்தவுள்ளார்.

# ஈராக்கில் கொடிய தொற்றுநோய்கள்

# தீவிரமாகப் பரவி வருகின்றன

(பாக்தாத்)

ஈராக்கில் வாந்திபேதி மற்றும் நெருப்புக்காய்ச்சல் நோய் பரவி வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள்கூறுகின்றன. அவசரமாக மருந்து வகைகள் அனுப்பி வைக்கப்படாவிட்டால் அச்சமூட்டும் வகையில் பரவக்கூடுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த யுத்தத்தில் நேச நாட்டுப் படைகளின் தாக்குதலால் ஈராக்கின்நீர் விநியோகமும், வடிகாலமைப்பும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. ஈராக்கியர்கள் தற்போது மாசடைந்த நீரை ஆறுகளிலிருந்து நேரடியாகப் பெற்று பாவித்து வருகின்றனர். பாக்தாத்தின் நீர்விநியோகமுறை யுத்தத்திற்கு முன்பிருந்ததுடன் ஒப்பிடும்போது 95வீதம் பாதிக்கப்பட்டுள்ளதாக உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது.

# குவைத்திற்கு திரும்பிச் செல்ல இலவச விமான பயணச்சீட்டு

(கொழும்பு)

வளைகுடாப் போரினால் மத்திய கிழக்கிலிருந்து தாயகம் திரும்பியோர் மீண்டும் அங்கு செல்வதற்கு இலவச விமானச் சீட்டுக்கள் வழங்கப்படுமென தொழில்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

கடந்த ஏழு மாதங்களாக வளைகுடாவில் நிலவி வந்த பதட்ட நிலையைத் தொடர்ந்து மத்திய கிழக்கில் வேலை பார்த்த பெரும்பாலான இலங்கை மக்கள் தாயகம் திரும்பியிருந்தனர்.

இப்போது அங்கு போர் நிறுத்தம் ஏற்பட்டிருப்பதைத் தொடர்ந்து மீண்டும் அங்கு செல்ல விரும்புகின்றனர். அவ்வாறு செல்லவிரும்புபவர்களுக்கு இலவச விமானச்சீட்டுக்கள் வழங்கப்படுமென தொழில்துறை அமைச்சு அறிவித்துள்ளது.

அதேவேளை போரினால் நாட்டைவிட்டு வெளியேறிய வெளிநாட்டவரை குவைத் திருப்பி அழைப்பது பற்றி இதுவரை எந்த முடிவும் எடுக்கவில்லை.

## ஜேர்மனி, போலந்தில் இருந்து

# சோவியத் படை விலகல் அடுத்த மாதத்தில் ஆரம்பம்

(வார்சோ)

போலந்திலும் கிழக்கு ஜேர்மனியிலும் இருக்கும் சோவியத் யூனியனின் இராணுவம் அடுத்தமாத தொடக்கத்தில் அங்கிருந்து விலகும் என சோவியத் ஜெனரலான மிகையில் மாக்கியா தெரிவித்துள்ளார்.

போலந்தின் வெளியுறவுத்துறை அமைச்சருக்கும் சோவியத் ஜெனரலுக்கும் இடையே வார்சோவில் நேற்று முன் தினம் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் முடிவில் இத்தகவல் அறிவிக்கப்பட்டது.

போலந்தில் இருக்கும் ராணுவமும், முன்னாள் கிழக்கு ஜேர்மனியில் இருக்கும் 3,80,000 முன் அரங்க ராணுவத்தினரும் அங்கிருந்து வெளியேறிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

முன்னதாக போலந்து அரசாங்கம் இந்த வருட இறுதிக்குள் போலந்தை விட்டு சோவியத் ராணுவம் விலகிச் செல்ல வேண்டும் என கேட்டிருந்தது.

# லோக்சபா உறுப்பினர்கள் குழுப்படம் எடுக்க முண்டியடிப்பு

(டில்லி)

இந்திய லோக்சபா உறுப்பினர்கள் சபைக்கான முடிவில் குழுப்படம்எடுக்கும் போது அதில் நிற்பதற்கு போட்டி போட்டார்கள் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

லோக்சபாவின் ஐந்து ஆண்டுகளின் முடிவிலேயே குழுப்படங்கள் எடுப்பது வழக்கமாக இருந்தது. ஆனால்நேற்று லோக்சபாக் கூட்டம் முடிந்த போது இப்படம் எடுக்கப்பட்டது இந்த சந்தர்ப்பத்திலேயே உறுப்பினர்கள் முண்டியடித்துக் கொண்டு படத்திற்கு நின்றார்கள்.

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் 25,000 பேருக்கு

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் இனிமேல் இருபத்தையாயிரம் மாணவர்கள் தெரிவு செய்யப்படுவார்கள் எனப் பாராளுமன்றத்தில் கடந்த புதனன்று தெரிவிக்கப்பட்டது.

வருடாந்தம் ஒரு லட்சத்து இருபத்தையாயிரம் மாணவ மாணவியர் தோற்றும் இப் பரீட்சையில் இதுகாலவரை ஐயாயிரம் பேரே தெரிவு செய்யப்பட்டிருந்தனர் என்பது தெரிந்ததே.

**கல்வி**

லது கொழும்பு பரீட்சைத் திணைக்களத்துக்கு நேரடியாக அனுபபி வைக்கலாம்.

இத் தகவலைப் பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்துள்ளார்.

1990 ஆகஸ்டில் நடைபெற்ற க. பொ. த. (உயர்தர) பரீட்சைக்குத் தோற்றிய பரீட்சார்த்திகள் இப் பரீட்சைக்குத் தோற்றத் தகுதியற்றவர்கள் என்பதைக் கவனத்திற் கொள்ள வேண்டும் என்றும் ஆர்தர் வெதமுல்ல சுட்டிக் காட்டியுள்ளார்.

**அம்பாறை மாவட்டத்**

தும் அதிகமான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

படையினரின்தடை காரணமாக இவ்வருடம் பெரும் போக நெற்செய்கையும் பல இடங்களில் மேற்கொள்ளப் படவில்லை. தற்போது மரவள்ளிச் செய்கைக்கும் படையினர் தடை விதித்துள்ளனர். இதனால் இப்பிரதேசத்தில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என்று இப்பகுதி விவசாயிகள் அச்சம் தெரிவித்தனர். (க)

# பதவியுயர்வு

யாழ். மாவட்டத்தில் நிர்வாக சேவை முதலாம் வகுப்பில் பணிபுரிந்த ஏழுபேருக்கு உயர் நிலைத் தரம் பதவிகள் கிடைத்துள்ளன.

யாழ் செயலகத்தில் மூவரும் மற்றைய பகுதிகளில் நால்வருமே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டவர்கள். (24)

**பூஸாவில்**

கடதாகி முடிக்கலாமா என்பதுபற்றி ஆராயும்படி உயர் நீதிமன்றம் சட்டத்தரணிகள் சங்கத்துக்குப் பணிப்புரை வழங்கியிருந்தது.

இன்றைய நிலையில் 185 பேர் சார்பாகத்தான் வழக்குகள் தாக்கல்செய்ய முடியும் என இலவச சட்ட ஆலோசனை நிலையம் தெரிவித்தது. தடுப்புமுகாமில் வைக்கப்பட்டிருந்த பலர் புனர்வாழ்வுக்காக மாற்றலாகியுள்ளார்கள் எனவும் தெரிவிக்கப் பட்டது.

**மூளைக்காய்ச்சல்**

எடுத்துவரும் வழியில் மரணமாகியுள்ளான்.

கிளிநொச்சி முறிகண்டி வாய்க்காலைச் சேர்ந்த செ. மோகனதீபன் என்ற பத்து வயதுச் சிறுவன் ஆபத்தான நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலையில் இருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு எடுத்துவரும் வழியில் மரணமாகியுள்ளான். (மு)

**வியாபாரியிடம்**

இராணுவத்தினர் மதுபோதையில் தன்னைக் கொலை செய்ய முயன்றதாகவும் அவர்களிடமிருந்து தான் மிகவும் சிரமப்பட்டு தப்பிவந்ததாகவும் அந்த வியாபாரி கண்ணீர் மல்க சக பிரயாணிகளிடம் தெரிவித்துள்ளார்.

இதேவேளை வவுனியா நகர் தாண்டிக்குளம் பகுதியில் சோதனைசெய்ய நிற்கும் சிறிலங்கா இராணுவத்தினர் நிறைவெறியில் நிற்பதுடன் தமிழ்ப்பிரயாணிகளை நையப்புடைத்து துன்புறுத்துவதுடன் அவர்களிடமுள்ள நகை, பணம் முதலியவற்றையும் கொள்ளையடித்தும் வருகிறார்கள், அத்துடன் சிகரெட், சாராயம் போன்ற பொருள்களையும் கொண்டுவந்து தரும்படி மிரட்டி வருகிறார்கள்.

**விண்ணப்**

மேலும் குறிப்பிடுகையில் தமக்கே (பணிப்பாளருக்கே) விண்ணப்பித்து அனுமதி பெற விரும்பும் மாணவர்கள் கவனிக்க வேண்டியது என்னவென்றால் இவ்வாறு விண்ணப்பிப்பது பிழையான விடயம் என பின்பு கணிக்கப்பட்டாலோ சுற்றுநிருபம் எதுவும் இவ்வாறு விண்ணப்பிப்பது குறித்த விபரங்களை உள்ளடக்கி வடகிழக்கு மாகாண கல்வி அமைச்சிடம் இருந்தோ அல்லது மத்தியகல்வி அமைச்சிடம் இருந்தோ எமக்கு அனுப்பப்படாது இருக்குமிடத்து இவ் விண்ணப்பங்களுக்கு நான் பொறுப்பேற்க முடியாது என்றும் குறிப்பிட்டார். (வோ)

# திறப்பு விழாவும் கண்காட்சியும்

வேலணை கல்விக் கோட்டத்திற்கான உபவள நிலையத் திறப்பு விழாவும் கண்காட்சியும் இன்று காலை 10 மணிக்கு வேலணை சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயத்தில் அதிபர் திரு பொ. கேதாரநாதன் தலைமையில் நடைபெறுகின்றது. (15)

**மேலும்**

கடந்த ஞாயிற்றுக் கிழமை நடந்த சண்டையின் போது மேலுமொரு 303 ரகத் துப்பாக்கி புலிகளால் மீட்டெடுக்கப்பட்டுள்ளது.

**சூப்டுக்**

(23 வயது), வேதன் என்று அழைக்கப்படும் வ. தம்பிராசா (32 வயது) என அடையாளம் காணப்பட்டுள்ளன. காணாமல் போன மூன்றாவது நபரான க. துரைரத்தினம் (32 வயது) என்பவரின் நிலை பற்றி தெரியவரவில்லை. கரை ஒதுங்கிய இரு சடலங்களும் அடக்கம் செய்யப்பட்டன.

**புலிகளின்**

ட்டன் சம்பவ தினத்துக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு கொழும்பில் நின்றுள்ளார் என்று விசாரணைகளின் போது தெரியவந்துள்ளதாக புலன் விசாரணையில் ஈடுபட்டிருக்கும் பொலிஸ் குழு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பில் பல இடங்களில் குண்டுகளை வெடிக்க வைத்த குற்றங்களுக்காகப் பாதுகாப்புப் படையினர் நியூட்டனைத்தேடி வலைவிரித்துள்ளனர் என்றும் கொழும்பில் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

குண்டுவெடிப்புத் தொடர்பான புலன் விசாரணையில் நூறு பொலிஸார் ஈடுபட்டுள்ளனர் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

**சிங்களக்**

ளம் மேற்கொண்டனர். இந்த சிரமதானம் தமிழ் சிங்கள மக்களிடையே நல்லுறவைப் பேணும் நடவடிக்கை என புளொட் குழுவினர் தெரிவித்தனராம்.

**வவுனியாவில்**

தாயார் ஆகிய மூவரும் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

மீண்டும் 9.30 மணியளவில் இப்பகுதிமீது மேற்கொள்ளப் பட்ட தாக்குதலில் சந்திரகுமார் (வயது 14), சவுந்தர நாயகம் (வயது 50) ஆகியோர் படுகாயமடைந்ததுடன் இப் பகுதியில் இருந்த வீடு ஒன்றும் சேதமடைந்தது.

மேலும் 10.45 மணியளவில் கிடாச்சூரி என்ற பகுதி மீது நடாத்தப்பட்ட குண்டு வீச்சுத் தாக்குதலில் நா. கலாநிதி (வயது 20), யே. செல்வநாயகி (வயது 30) ஆகியோர் காயமடைந்ததுடன் வீடு ஒன்றும் பலத்த சேதமடைந்தது.

**படகில்**

நேற்றுமாலை 1.50 மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆ. கந்தையா (வயது 59) கிறீஸ்கந்தராணி (வயது 23), இ. பிரியா (வயது 2) ஆகியோர் காயமடைந்தனர்.

# மரண அறிவித்தல்

## திரு. சூசைமோசேஸ்

தோலகட்டி, பலாலி தெற்கு வசாவிளானைச் சேர்ந்த இளைப்பாறிய ஆசிரியர் திரு. சூசைமோசேஸ் 10-03-91 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார். இவர் அன்னமரியம்மா (மணி)வின் அன்புக் கணவரும், ஸ்ரனிஸ்லாஸ் (பிரான்ஸ்), கொன்சன்ரையின் (பிரான்ஸ்), காலம்சென்ற பாலச்சந்திரன் (பாலு), மனோகரன் (கனடா), சந்திரிக்கா (சந்திரா) (பிரான்ஸ்), இமெல்டா (இந்திரா), சுபத்திரா, மஞ்சுளா, திச்சாட் (பிரான்ஸ்), டோனாஸ்(பிரான்ஸ்), டொலாஸ்(பிரான்ஸ்) இவர்களின் அன்புத் தந்தையும், மேரிஅஞ்சலா (பிரான்ஸ்) லங்கேஸ்வரன் (பிரான்ஸ்), பாலேந்திரன் (பிரான்ஸ்), கருணைநாதன் இவர்களின் மாமனாரும், றொனால்ட், றொன்சன், றேகா, கபிலன், றேகன், சிந்து, வான்மதி ஆகியவர்களின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற பிலிப் திரவியம், காலஞ்சென்ற சவிரிமுத்து, மேரியோசேப்பின் (நல்லம்மா) இவர்களின் அன்பு சகோதரனுமாவார். இவரின் நல்லடக்கம் 24-03-91 ஞாயிற்றுக்கிழமை பொறளை கனத்தை சேமக்காலையில் நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம்.

இங்ஙனம்

அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்

25/2 மத்தியூஸ் வீதி,
யாழ்நகர்.
(R-1178)

தகவல்:
பிலிப் கலிஸ்ரஸ் ரவின்
(யோண்சன் - பெறாமகன்)

**குடாநாட்டு**

குடாநாட்டின் ஏனைய பகுதிகளில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களில் இருந்து சற்று அதிகரித்த விலையில் நிர்ணயிக்கப்பட்டும் உள்ளது.

இவ்விலை நிர்ணயப் பட்டியல் வருமாறு:

| உணவுப் பொருள்கள் | மொத்த விலை ரூபா சதம் | சில்லறை விலை ரூபா சதம் | மருதங்கேணி, தீவுப் பகுதி விலை ரூபா சதம் |
|---|---|---|---|
| மா | 24. 00 | 25. 00 | 26 50 |
| சீனி | 33. 00 | 34. 00 | 36. 00 |
| சர்க்கரை | 32 50 | 33. 50 | 35. 50 |
| வெள்ளைப்பச்சை அரிசி | 25. 00 | 26. 00 | 27. 00 |
| சோறா அரிசி | 25. 00 | 26. 00 | 27. 00 |
| ரயர் | 92. 00 | 95. 00 | 97. 50 |
| டியூப் | 38. 00 | 40. 00 | 42. 50 |
| பிஸ்கட் (மாறி) | 65. 00 | 70. 00 | 75. 00 |
| சோளா இறைச்சி(ரி.வி.பி) | 13 00 | 13. 50 | 14. 00 |

இப்பட்டியலில் உள்ள விலையில் பொருள்கள் விற்க நிர்ணயிக்கப்பட்ட போதிலும் மேலும் பொருள்கள் கொள்வனவு செய்யும்போது விலை குறையுமானால் குறைத்து சில்லறை விலைக்கு விற்கப்பட வேண்டும் என்றும் தொடர்ந்து விலை அதிகரித்துக் கொண்டு செல்லுமிடத்து மீண்டும் புதிய நிர்ணய விலைகள் தீர்மானிக்கப்படும் எனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (வோ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள "ஈழநாதம்" பணிமனையில் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது